## பவானி நகராட்சி (ஈரோடு மாவட்டம்) 24.08.2022-ம் தேதி புதன்கிழமை நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள் தீர்மானத்தின் உண்மை நகல்

**பொருள் எண்: 1**

பவானி நகராட்சி புதிய பேருந்து நிலையத்தில் அமைந்துள்ள கடை எண் 12 ஐ திருமதி.எஸ்.ரேவதி க/பெ முருகேசன் என்பவர் ஏலம் எடுத்திருந்தார் . மேற்படி கடையினை ஏலத்தில் எடுத்த நாள் முதல் உடல் நல குறைவின் காரணமாக கடையை தொடர்ந்து நடத்த இயலவில்லை என கடை எண் 12 ஐ 01.08.2022 ல் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்துவிட்டார்.

பவானி நகராட்சி புதிய பேருந்த நிலையத்தில் அமைந்துள்ள கடை எண் 13 ஐ திருமதி.அ.பூங்கொடி க/பெ அன்பழகன் என்பவர் ஏலம் எடுத்திருந்தார் . கண் அறுவை சிகிச்சை செய்த காரணத்தினால் கடையை தொடர்ந்து நடத்த இயலவில்லை என கடை எண் 13 ஐ 01.08.2022 ல் நகராட்சி வசம் ஒப்படைப்பு செய்துவிட்டார்.

எனவே, மேற்கண்ட, இரண்டு கடைகளையும் பொது ஏலத்திற்கு கொண்டு வர மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண் : 94** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.953,954/2022/அ2)

**பொருள் எண்: 2**

பவானி நகராட்சியில் தூய்மை பணியாளராக பணிபுரிந்து இறந்த திரு.பரமசிவம், என்பவரின் மனைவி திருமதி.தங்கமணி, என்பவர் மீது பவானி நகராட்சியின் சார்பில் சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்தது. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு எண்.WP20997/2004 சம்மந்தமாக நகராட்சியின் சார்பில் ஆஜராகும் வழக்கறிஞர் திரு.பி.எஸ்.ஜெயக்குமார், சென்னை அவர்களுக்கு வழக்கறிஞர் கட்டணம் தொகை ரூ. 14000/-ஐ வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் திரு.பி.எஸ்.ஜெயக்குமார், சென்னை அவர்களுக்கு தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**மன்றத்தீர்மான எண் : 95** அனுமதிக்கப்பட்டது ( ந.க.எண். 747/2022/எச்1)

**பொருள் எண்: 3**

பவானி நகராட்சி நகர்மன்ற தலைவர் அவர்களுக்கு புதியதாக Mahindra Scropio வாகனம் ரூ.16,32,560/- தமிழ்நாடு அரசு அங்கீகாரம் பெற்ற விலையில் (DGST) கொள்முதல் செய்து வாங்கப்பட்டது. நகர்மன்ற தீர்மான எண் 31 நாள் 28.04.2022 ல் மேற்கண்ட வாகனத்திற்கு ரூ.16.00/- இலட்சம் அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | கூடுதலாக செலவிடப்பட்ட தொகை(வண்டியின் அடக்க விலையில் கூடுதல்) | ரூ.32,560/- |
| 2. | வாகனகாப்பீட்டு தொகை (யூனிடெட் இந்தியா இன்சூரஸ்) | ரூ.49,374/- |
| 3 | வாகன தகுதி சான்று, சாலை வரி (Road Tax) மற்றும் பதிவு செய்தல் கட்டணம் உட்பட | ரூ.3,00,000/- |
| 4. | வாகனத்திற்கு தேவையான இதர உபரி பொருட்கள் (Extra Fittings) | ரூ.2,20,000/- |

மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்கான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

3. அவசர அவசியம் கருதி நகர் மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று, மன்ற அனுமதியை எதிர்நோக்கி மேற்கண்ட செலவினத்தை மேற்கொண்டமைக்கு மன்றம் ஏற்கலாம்.

**மன்றத்தீர்மான எண் : 96** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண் 502/2022/இ1)

**பொருள் எண்: 4**

பவானி நகராட்சி - பொது சுகாதாரம் - இந்நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் சுகாதார பணிகள் மேற்கொள்ள அரசாணை நிலை எண்: 101 (ந.நி.கு.வ.துறை), நாள்: 30.04.1997ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர்களின் எண்ணிக்கை 177 ஆகும். ஆனால், இந்நகராட்சியில் தற்போது 50 நிரந்தர துப்புரவு பணியாளர்கள் மட்டுமே பணிபுரிந்து வரும் நிலையில் இந்நகராட்சி ஆணையர் அவர்களின் செயல்முறைகள் உத்திரவு ந.க.எண்: 2255/எச்1/2019, நாள்: 29.11.2019-ன் படி திடக்கழிவு மேலாண்மை பணிக்கு இந்நகராட்சிக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் 63 துப்புரவு பணியாளர்களை M/s Relyon Facility Services private Ltd, Chennai நிறுவனத்திடமிருந்து பெற்று துப்புரவு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரப்படுகிறது.

வெளிப்பணி ஒப்படைப்பு முறை 31.08.2022 ஆம் தேதியுடன் ஒப்பந்தகாலம் முடிவடைகிறது. மேலும், ஒரு மாதத்திற்கு அதாவது 01.09.2022 முதல் 30.09.2022 வரை காலநீட்டிப்பு செய்வதற்கும், M/s Relyon Facility Services private Ltd, Chennai அவர்களுக்கு பணி ஆணை வழங்கவும் அதற்காகும் உத்தேச செலவினம் ரூ.10.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. மன்ற அனுமதிக்கலாம்.

2. நகர்மன்ற அனுமதி பெற்று பணி மேற்கொண்டமைக்கு மன்றம் அங்கீகரிக்கலாம்.

**மன்றத்தீர்மான எண் : 97** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்:2255/2015/எச்1)

**பொருள் எண்: 5**

பவானி நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் திடக்கழிவு மேலாண்மையின் ஒரு பகுதியாக பிளாஸ்டிக் கழிவுகள் சிமெண்ட் ஆலைகளுக்கு அனுப்ப ஏதுவாக தினமும கொள்முதல் செய்யப்பட்டு வந்த கித்தான் சாக்குப்பைகள் ஒப்பந்தப்புள்ளி காலம் கடந்த 31.03.2022ஆம் தேதியுடன் முடிவடைதாலும், புதிதாக ஒப்பந்தப்புள்ளி கோர சில மாதமாகும் என்பதால் நகர்மன்ற தீர்மான எண்: 178, நாள்: 31.08.2021-ன் படியும், இந்நகராட்சி ஆணையர் அவர்கள் பணி உத்திரவு ந.க.எண்: 865/2021/எச்1, நாள்: 01.09.2021இன் படியும் ஏற்கனவே உள்ள ஒப்பந்தப்புள்ளி விலை அடிப்படையிலேயே தினமும் 01.04.2022-ஆம் தேதி முதல் 31.05.2022ஆம் தேதி வரை மேற்கொள்ளவும், மேற்படி கித்தான் சாக்குப் பைகளை கொள்முதல் செய்து உபயோகப்படுத்தி உலர்கழிவுகளை சேகரித்து அனுப்பி வைக்கவும் மன்ற ஒப்புதல் வேண்டப்படுகிறது. இதற்கான செலவினம் ரூ.40,000/-ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) நகர்மன்றத் தலைவரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்ததாரருக்கு தொகை வழங்கியதை மன்றம் ஏற்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 98</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்: 866/2021/எச்1)

**பொருள் எண்: 6**

பவானி நகராட்சிக்குப்பட்ட பகுதிகளில் மேட்டூர் அணை மற்றும் பவானிசாகர் அணையிலிருந்து உபரி நீர் திறக்கப்பட்டதால் காவேரி ஆறு மற்றும் பவானி ஆறு இருபுறமும் உள்ள கரையோரங்களில் வசிக்கும் பொதுமக்களை பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகள் இந்நகராட்சியால் செய்து கொடுக்கப்பட்டது. அதற்கான உத்தேச செலவினம் ரூ.100,000/- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 99</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்:2255 /2015/எச்1)

**பொருள் எண்: 7**

பவானி நகராட்சியில் 75வது சுதந்திர தின அமுதப்பெருவிழா சிறப்பாக கொண்டாடும் வகையில் விழா மேடை அமைத்தல், ஒலிபெருக்கி அமைத்தல், சாமியானா பந்தல் அமைத்தல் மற்றும் இதர செலவினங்களை மேற்கொண்டமைக்கான உத்தேச செலவினம் ரூ.100000/- ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**: மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>மன்றத்தீர்மான எண் : 100</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்: 942 /2022/எச்1)

**பொருள் எண்: 8**

சென்னை உயர்நீதிமன்ற தீர்ப்பாணையில் பவானி வட்டம், பவானி கிராமம் க.ச.எண்.831/பி, 897/ஏ, மற்றும் ரீ.ச.எண்.792/7 என்ற இடத்தில் நகராட்சிக்கு சொந்தமான பொது உபயோக இடமான 10 சென்ட் பரப்பளவுள்ள இடத்தை சென்னை உயர் நீதி மன்ற வழக்கு எண். CMPNo.16159/2019 in SA No 1341/2001ன்படி நகராட்சிக்கு சாதகமாக வரப்பெற்றதின்படி இந்நகராட்சி வழக்கறிஞர் திரு.என்.பரணிதரன் என்பவரின் சட்ட கருத்துரு பெற்று ஆக்கிரமிப்பை அகற்ற துரித நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தெவித்துள்ளார். எனவே மேற்கண்ட இடத்தில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு JCB இயந்திரம், சென்னை உயர்நீதிமன்றத்திற்கு போதிய ஆவணங்களை சமர்ப்பிக்க ஏதுவாக புகைப்படம் மற்றும் வீடியோ பதிவு செய்வதற்கும் , சென்னை உயர்நீதிமன்ற அரசு வழக்கறிஞர் திரு.பி.எஸ்.ஜெயக்குமார் அவர்களுக்கு வழக்கு கட்டணம் தொகை மற்றும் இதர செலவினங்களுக்கு உத்தேசமாக ரூ.50,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

**<u>மன்றத்தீர்மான எண் : 101</u>** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.303/2022/எப்1)

**பொருள் எண்: 9**

ஈரோடு மாவட்டம் பவானி வட்டம் பவானி நகராட்சிக்கு சொந்தமான சோமசுந்தரபுரம் பழைய க.ச.எண்.831/பி, 897/ஏ புதிய ரீ.ச.எண்.792/7ல் உள்ள ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ள இடத்தினை 18.08.2022 அன்று அகற்றப்பட்டு பவானி நகராட்சி வசம் கையகப்படுத்தப்பட்டுள்ளது.

மேற்கண்ட இடத்தில் உரிய பாதுகாப்பு எடுக்கும் பொருட்டு தனி நபரால் ஆக்கிரமிப்பு செய்ய முடியாத வகையில் இடத்தை சுற்றிலும் கம்பி முள் வேலிகள் அமைத்து கம்பி நுழைவாயில் கேட் அமைத்து நிரந்தர விளம்பர பலகை அமைக்க உத்தேச செலவினத் தொகை ரூ3.00 இலட்சம் ஆகும். மேற்கண்ட செலவினத்தை மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு** : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

**மன்றத்தீர்மான எண் : 102** ரூபாய் 1லட்சம் மட்டும் மன்றம் அனுமதிக்கப்பட்டது

(ந.க.எண்.303/2022/எப்1)

**பொருள் எண்: 10**

பவானி நகராட்சியின் வார்டு எண் 1 முதல் 27 வார்டுகளிலும் உள்ள வீடுகள், கடைகளில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தினசரி சேகரமாகும் கழிவுகளிலிருந்து, மறுசுழற்சிக்கு பயன்படும் பிளாஸ்டிக் கழிவுகளை சொந்த பொறுப்பில் தனியே பிரித்து எடுத்து நகரை விட்டு வெளியே எடுத்து சென்று சிமெண்ட் ஆலைகளில் ஒப்படைத்தல் மற்றும் மறுசுழற்சி ஆலைகளுக்கு எடுத்து செல்லுதல் போன்ற உரிய அறிவியல் வழிமுறைகளின்படி கையாளுதல் பணிக்காக 31.03.2023 காலங்களுக்கு வெளிப்பணி ஒப்படைப்பு முறையில் பணிகள் மேற்கொள்ளகீழ்கண்ட நிபந்தனைகளுடன் ஒப்படைப்பு செய்திட மன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும்.

**நிபந்தனைகள்**

1. பவானி நகராட்சியில் தினசரி சேகரமாகும் கழிவுகளில் உள்ள மறுசுழற்சிக்கு பயன்படும் பிளாஸ்டிக் கழிவுகளை தங்கள் பொறுப்பில் தனியே பிரித்து எடுத்து கொள்ள வேண்டும்.
2. இப்பணிகள் அனைத்து வேலை நாட்களிலும் மேற்க்கொள்ள வேண்டும் .
3. தனியே பிரித்து எடுத்த கழிவுகளை தங்கள் பொறுப்பில் நகரைவிட்டு வெளியே எடுத்து சென்று உரிய சிமெண்ட்ஆலைகளில் ஒப்படைத்தல், மறுசுழற்சி ஆலைகளுக்குஅனுப்பி அவைகளை அறிவியல் வழிமுறைகளின்படி கையாளுதல் பணிகள் செய்திட வேண்டும்.
4. நகராட்சியின் மிஷினரி மற்றும் கைதள்ளுவண்டிகளை பயன்படுத்தி கொள்ளலாம் , நகராட்சியின் சொத்துகளுக்கு எவ்வித சேதமும் ஏற்படுத்த கூடாது.
5. நகராட்சி மறுசுழற்சிமையத்தினை சுகாதாரமான முறையில் பராமரிக்க வேண்டும்.
6. மேற்படி பணிகளுக்கு ஏற்படும் எவ்வித செலவினங்களுக்கும் நகராட்சியில் எவ்வித கட்டணமும் வழங்கபட மாட்டாது. முற்றிலும் தங்களின் பொறுப்பாகும்.
7. இப்பணிகளை தொடர்வதும், பணிகளின்முன்னேற்றம், சுணக்க நடவடிக்கைகள் ஆணையரின் முடிவிற்கு கட்டுபட்டதும். இறுதியானதும்
   ஆகும்.

**அலுவலக குறிப்பு** : மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றத்தீர்மான எண் : 103** அனுமதிக்கப்பட்டது (ந.க.எண்.1453/2015/எப்1)

**நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்**

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 25.08.2022-ம் தேதி, ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு நலதிட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சிகளுக்கு சுற்று பயணம் மேற்கொண்டு, 25.08.2022-ம் தேதி

வியாழக்கிழமை மாலை 6.00 மணிக்கு பவானி நகருக்கு வருகை புரிய உள்ளார்கள். மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை இந்நகரமக்களின் சார்பாகவும், நகர்மன்றத்தின் சார்பாகவும் வருக வருக என இந்நகர்மன்றம் வரவேற்கிறது.

**அலுவலககுறிப்பு** நகர்மன்ற தலைவரால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றலாம்.

**மன்றத்தீர்மான எண் : 104** நகர்மன்ற தலைவரால் கொண்டு வரப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது,

(ஒம்).E,சிந்தூரி.

தலைவர்,

பவானி நகராட்சி.

/உண்மைநகல்/

ஆணையாளர்

பவானி நகராட்சி.